வெள்ளி

VELLI
News
Magazine

30
சதம்



# எம்.ஜி. ஆரின்
# எதிர்காலம்....?

மே '72

# நாலு பேருக்கு நன்றி!

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களான
டாக்டர் விக்கிரமசிங்கா
சரத் முத்தேட்டுவேகம
எம். ஜி. மென்டிஸ்
ஏலியன் நாணயக்காரா

என்ற இந்த நான்கு பேரும் கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளைக் காட்டிலும் தமது மனச்சாட்சியைப் பெரிதாக மதித்திருக்கிறார்கள்.

தங்களால் யாரை வேண்டுமானாலும் எதிர்த்து நெஞ்சுரத்தோடு நடந்துகொள்ள முடியும் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகளுள் சிறு எண்ணிக்கை உடையவர்களாக கம்யூனிஸ்ட் கட்சியினர் இருந்தபோதிலும் தாங்கள் பெருநோக்குப் படைத்தவர்களாக நடந்துகொள்ளக் கூடியவர்கள் என்பதை இந்த நான்குபேரும் நிருபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பார்கள். ஆட்சியில் உள்ள ஐக்கிய முன்னணியில் மிகச் சிறுபான்மையினராக கம்யூனிஸ்ட் கட்சியினர் இருந்தபோதிலும் தாங்கள் 'காரம்' மிகுந்தவர்கள் என்பதைச் செயல்மூலம் காட்டியிருக்கிறார்கள்,

இதற்காக இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட குற்ற விசாரணைக் கமிஷன் மசோதாவை ஆரம்ப முதலே எதிர்த்து வந்ததோடு நில்லாது, ஆட்சி மன்றத்தில் இம்மசோதா மீதான வாக்கெடுப்பு நடைபெற்றபோது அதனை ஆதரிக்காது இருந்ததன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை அரசியலின் போக்கே மாறிப்போகத்தக்கதான ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் இந்த நான்கு பேரும்!

இன்னொரு கோணத்தில் பார்க்கும்போது இந்த நாலு பேரையும் அவ்வளவு தூரம் பாராட்டவேண்டிய தேவை இல்லைப் போலத் தோன்றுகிறது!

ஏன்....?

கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே மிகவும் சாதாரண மக்களின் உணர்ச்சிகளை மதித்து நடப்பதில் முதலிடம் வகிப்பது;

இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன?

கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே மிகவும் சாதாரணமான மனிதர்களின் கட்சியாக இருந்து வருவதுதான்!

இந்த நான்கு பேரும் மிகவும் பிரமாதமான காரியம் எதையும் சாதித்து விடவில்லை!

மிகவும் சாதாரணமான மனிதர்களின் உணர்ச்சிகளை மதித்து நடந்திருக்கிறார்கள்-அவ்வளவுதான்!

ஆனால்....

மிகவும் சதாரண மனிதர்களின் உணர்ச்சிகளை மதித்து நடப்பது இந்த நாட்டிலுள்ள ''பெரிய மனிதர்களை''ப் பொறுத்த மட்டில் மருந்துக்கும் காணமுடியாத ஒரு அருங்குணம் அல்லவா!

# எம். ஜி. ஆரின் எதிர்காலம்.....?

கலை உலகம்

அரசியல் உலகம்

— என்ற இரண்டு துறைகளிலும் புகழ் பெற்ற மனிதர் எம். ஜி. ஆர்!

இவரது அரசியல் கொள்கைகளும் கருத்துக்களும் இவரது கலையுலக வாழ்க்கைக்கு தடையாக இருந்ததும் உண்டு; துணையாக இருந்ததும் உண்டு.

இதே போல

இவரது கலையுலக வெற்றிகளும் தோல்விகளும் அங்கு ஏற்பட்ட வித்துவக் காய்ச்சல்களும் போட்டிகளும் பொறாமைகளும் இவரது அரசியல் வாழ்க்கைக்கு தடையாக இருந்ததும் உண்டு; துணையாக இருந்ததும் உண்டு.

ஆனால்

சரியான கொள்கைகள், பொருத்தமான வாழ்க்கை முறை, எல்லாரையும் பேணி நடக்கும் பாங்கு, யாருக்காவது இக்கட்டான ஒரு நிலை ஏற்பட்டால் வேறுபாடுகள் எல்லாவற்றையும் மறந்து உடனே அவர்களுக்கு உதவி செய்திடத் துடித்திடும் சுபாவம் என்பனவற்றால் இவர் அங்கும் வளர்ந்தார்; இங்கும் வளர்ந்தார்!

ஒரு அபூர்வமான மனிதர்தான் எம். ஜி. ஆர்!

ஒரே சமயத்தில் கலை உலகம் அரசியல் உலகம் ஆகிய இரண்டு துறைகளிலும் இவரைப் போல இவ்வளவு உயர்ந்த நிலைக்கு வந்துள்ள மனிதர் வேறு யாருமேயில்லை.

அமெரிக்காவில் ஒரு மனிதர் இருக்கிறார். அவர் அங்கு ஓரளவுக்குப் பிரபலமான அரசியல் வாதியாக இருக்கின்ற அதே நேரத்தில் ஓரளவுக்குப் புகழ் பெற்ற ஹாலிவூட் நடிகராகவும் இருக்கிறார்; அவருடைய பெயர் டொனல்ட் ரீகன்.

உலகப் புகழ்பெற்ற செய்திப்பத்திரிகையான ''டைம்'' எம். ஜி. ஆரைப் பற்றிக் குறிப்பிட்டு புகழ்ந்து எழுதும்போது அமெரிக்க மக்களுக்கு விளங்கிக்கொள்ளும் உதாரணமாகக் குறிப்பிடவேண்டும் என்பதற்காக ''தமிழ்நாட்டின் டொனுல்ட் ரீகன்'' என்று எழுதியது!

ஆனல் ரீகனைக் காட்டிலும் எவ்வளவோ உயர்ந்தவர் எம். ஜி. ஆர் !

எம். ஜி. ஆருடன் ஒப்பிடவேண்டுமானல் ரீகனைத் தவிர வேறு யாருமே இந்த உலகத்தில் இல்லை என்பதும் உண்மைதான் !

ஒரே சமயத்தில் கலை உலகம் அரசியல் உலகம் ஆகிய இரண்டு துறைகளிலும் இவ்வளவு உயர்ந்த புகழைப் பெற்றுள்ள ஒரே மனிதர் உலகத்திலேயே எம். ஜி. ஆர் ஒருவர்தான் !

ஆனல்

வெகு விரைவிலேயே

எம். ஜி. ஆர் ஒரு பிரச்சினையை எதிர்நோக்க வேண்டிய காலம் வரப்போகிறது ......

முன்பின்னக அறுபது வயது என்ற நிலையில் நிற்கும் எம். ஜி. ஆர் இப்போது பார்க்கும்போது 'காயகல்பம்' உண்டவர் மாதிரி மாரு இளமையுடன் காட்சி தருவது உண்மைதான்!

ஆனல்

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணத்திலும் ஒரு மனிதனின் வயது கூடிக்கொண்டே போகின்றது. இதைத் தடுக்க யாராலும் முடியாது.

எம். ஜி. ஆரும் இதற்கு விதிவிலக்கு அல்ல !

இன்னும் சிறிது நாட்கள் போனல்—

எம். ஜி ஆரினல் கதாநாயகனுக நடிக்கக் கூடிய நிலை இருக்காது என்பது உண்மை ! அப்படியானல் இவர் கலைத்துறையை விட்டே விலகிவிடுவாரா ?

இல்லை !

எம். ஜி. ஆர். அப்படிச் செய்யமாட்டார் !

நடிப்புத் துறையில் மட்டுமல்லாது டைரக்ஷன், படத் தயாரிப்பு என்ற துறைகளிலும் மிகவும் அற்புதமான ஆற்றலும் அனுபவமும் கொண்டவர் எம். ஜி. ஆர் !

எனவே

வயது தெரியத் தொடங்கி விட்டால் இவர் நடிப்புத் துறையை விட்டு விலகுவாரே தவிர நிச்சயமாக கலைத்துறையை விட்டு விலகமாட்டார் !

நடிப்புத் துறையை விட்டு இவர் விலகும்போதுதான் இவரது அரசியல் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும்.

இதுநாள் வரை அரசியல் துறையில் ''கிங்மேக்''கராக இருந்துவந்த இவர் எதிர்காலத்திலும் அப்படியே இருப்பார் என்று எதிர்பார்ப்பது தவருகும்.

எந்த ஒரு ''கிங்மேக்''கருமே தனது வாழ்நாள் முழுவதுமே ''கிங்மேக்''கராக இருக்க விரும்பியது கிடையாது ...

# வளமான வாழ்வும் சுயவசிய முறையும்

க. குகதாசன்

"Every day and in every way I am getting better and better"

## சுயவசிய முறை என்றால் என்ன?

பிரெஞ்சு தேசத்தில் வாழ்ந்த மனோ தத்துவ நிபுணரான எமில்கூ என்பவர் 1910 ஆம் ஆண்டில் மனோதத்துவத்தினால் மனிதனுக்குப் பலன் தரக்கூடிய மனோதத்துவ முறையொன்றினை ஆராய்ந்து அதில் வெற்றியும் கண்டார். அம்முறைக்கு அவர் 'auto suggestion' என்று பெயரிட்டார். இதை நாம் தமிழில் 'சுயவசியம்' என்றோ அன்றேல் "சுயமந்திரம்" என்றோ கூறலாம்.

## எம்மனமே எம்மை ஆதிக்கம் செலுத்துகின்றது.

பொதுவாக எல்லா மனோதத்துவ நிபுணர்களும் மனிதனை ஆட்டிப்படைப்பது அவனின் மனமே என்று கருதுகின்றனர். எல்லா மனிதரிடத்தும் இருவகையான மனங்கள் உள்ளன. ஒன்று நாம் தூங்கும்போது எம் மனத்தை ஆட்டிப்படைக்கும் 'நனவிலி' அல்லது 'தூங்கும் மனம்' மற்றது எமக்குத் தெரியக்கூடியதாகவிருக்கும் சிந்திக்கும் அல்லது நனவு மனம். நாம் நித்திரை செய்யாமல் இருக்கும் போது எமது அறிவைக் கொண்டு நாம் சிந்தித்துச் செயலாற்றமுடியும். ஆனால் நாம் நித்திரைசெய்யும்போது எம்மை ஆட்டிப்படைக்கும் மனம் - நனவிலி மனம்-சிந்தித்துச் செயலாற்றும் மனத்தைவிட மிகவும் பலம் வாய்ந்தது. இப்பலம் மிக்க மனத்தினால் எம்வாழ்வை வளமுள்ளதாக மாற்றலாம்! வாழ்வில் எமக்கு வேண்டியவற்றினை இம்மனத்தில் கூறிஇதில் பதியச் செய்தல் வேண்டும். நனவிலி மனதில் நீங்கள் வேண்டுபவை நன்றாகப்பதிந்துவிட்டால், எம்மால் எமதுமுயற்சியினால் அடையக்கூடியவற்றை நாம் இலகுவில் அடைந்துவிடலாம்.

"Every day and in every way I am getting better and better"

மேற்கூறிய வரிகளை ஒருவர் தினமும் தனது மனத்தில் பலமுறை — அதிகாலையிலும், நித்திரைக்குச் செல்லுமுன்பும் கூறிவந்தால் சிறுமைவாழ்வுஅகன்று இனிய வாழ்வு பொலிவுறும் என்று திரு எமில்கூ கூறினார். இவரின் இச் சுய மந்திரத்தை நாம் தமிழில்,

"ஒவ்வொரு நாளும்
எல்லா வகையிலும் - நான்
முன்னேறி முன்னேறி
வருகின்றேன்" என்று கூறலாம்.

## சுய வசியம் செய்யச் சிறந்த நேரம்

தற்காலத்துய மனோதத்துவ நிபுணர்கள் சுயவசிய முறையை நித்திரை விட்டெழுந்த அதி காலை நேரத்திலும், இரவில் நித்திரைக்குச் செல்லும் நேரத் திலும் கூறினால் அதிக பலன் களைக் கொடுக்கின்றது என்று கூறுகின்றனர். நித்திரை விட் டெழுந்து நாம் பல் துலக்கி முகம் கழுவி அதன்பின் தேனீர் அருந்தும் வேளைகளிலெல்லாம் பல வீண் எண்ணங்களை எண்ணு வோம். இப்படியான நேரங் களில் "ஒவ்வொரு நாளும் எல்லா வகையிலும்—நான் முன் னேறி முன்னேறி வருகின்றேன்" என்று அமைதியாக — மவுன மாக — மனதுக்குள் முப்பது நாற்பது தடவை ஒரு மாதத் திற்கோ அன்றேல் இரு மாதங் களுக்கோ தொடர்ச்சியாகக் கூறிவாருங்கள் நாளடைவில் உங்களை அறியாமலே இவ் வாச கங்களை உங்கள் வாய் முணு முணுக்கும். இவ் வாசகங்கள் உங்களது நனவிலி மனத்தில் நன்ருகப் பதிந்துவிடும். அப்ப டிப் பதிந்துவிட்டால் உங்கள் வாழ்வில் ஓர் இன்ப அத்தியா யம் தொடங்கிவிடும்.

## சுயவசியம் எப்பொழுது நற்பலன் கொடுக்கும்

எவ்விடயத்தை மேற்கொ ண்டாலும் அதில் நம்பிக்கை யுடன் ஈடுபடல் வேண்டும். சுயவசியமுறை இதற்கு விதிவி லக்கல்ல. சுயவசிய முறையினுல் தனக்கு நல்ல பலன் கிடைக் கும் என்று எண்ணுபவேனுக்க சுயவசியமுறையினுல் நற்பலன் கிடைக்கும். எவ்விடயத்திலும் அதன் நன்மைப்பகுதியையே (Positive Side) எதிர்நோக்குப வனிடத்தில் சுயவசியமுறை



ஸ்ரீதர் பல இந்தித் திரைப் படங்களை தயாரித்து டை ரக்ட் செய்து, வெளியிட்டு இருக் கிருர். ஆனுல் இவர் இன்ன மும் இந்தி மொழியை கற்றுக் கொள்ளவில்லை. இந்தியில் யாராவது பேசினுல் இவரால் ஒரு வார்த்தையைக் கூட புரிந்து கொள்ள முடியாது. இவரைச் சந்திக்கும் இவரது வட இந்திய திரையுலக நண்பர்கள் "என்ன இது, இன்னமும் இந்தி கற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்களே" என்று இவரைக் கேலிசெய்கிருர் கள்! இவர் அந்தக் கேலியைக் கண்டு பயப்படவில்லை! "இந்தி தெரியாத நிலையிலேயே அந்த மொழியைப் பயன்படுத்தி என் ஞல் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை சம்பாதிக்க முடி கிறதே" என்று இவர் பெரு மைப்படுகிருர்!

நன்கு செயல்படும். ஆகவே நாம் எச்செயலிலும் - எவ்விடயத்திலும் - எக்கருமத்திலும் அதன் நன்மைப்பகுதியையே— வெற்றிப் பகுதியையே எதிர் நோக்கவேண்டும். உதாரணமாக நீங்கள் ஒரு சோதனைக்கு ஆயத்தம் செய்யும்போது, இச் சோதனை மிகக் கடுமையானது, எப்படிப் படிக்கப்போகின்றேன், இதில் தோல்வியடைவது திண்ணம் என்ற தீமைப்பகுதியை ( Negative Side ) எண்ணலாகாது. இச் சோதனை மிகவும் இலகுவானது. எத்தனையோ பேர் இச்சோதனையில் சித்தியடைந்துவிட்டனர். அதுபோலவோ நானும் நன்றாகப்படித்து இச்சோதனையில் சித்தியடைவேன் என்று எண்ணுதல் வேண்டும். இப்படி எண்ணுபவனுக்கே சுயவசியமுறை நற்பலன்களைக்கொடுக்கும்.

சுயவசிய வசனங்களை உங்களுக்குத் தேவையான முறையில் அமைத்துக் கொள்ளலாம்.

'ஒவ்வொரு நாளும் எல்லா வகையிலும்-நான் முன்னேறி முன்னேறி வருகின்றேன்' என்ற சுயவசிய மந்திரத்தை முணுமுணுக்கச் செய்தே பல தீராத வியாதிக்காரர்களைக் குணமாக்கினர் திரு. எமில்கூ. இதில் வெற்றி கண்ட திரு. எமில்கூ மனிதன் தனக்குத் தேவையானவற்றை குறுகிய வசனமுறையில் அமைத்து அதை, மனம் நெகிழ்ந்தும் கனிந்தும் இருக்கும்போது கூறினல் அவன் அடையக்கூடியவற்றை இலகுவில் அடைந்துவிடுவான் என்று கூறினர். இச் சுயவசிய முறையினலேயே எமது பல வியாதிகள் குணமடைகின்றன. சிலர் மருந்து அருந்தும்போது "டாக்டர் நல்ல மருந்து தந்துள்ளார்; இன்னும் இரு தினங்களில் இவ் வியாதி என்னை விட்டு நீங்கிவிடும்" என்ற நம்பிக்கையுடன் தம்மை அறியாமலே சுயமந்திரத்தைக் கூறிக்கொண்டு மருந்து அருந்தும்போது வியாதி பறந்துவிடும். ஆனல் "இது என்ன பச்சைத்தண்ணி மருந்து, என்

---

✣ மேற்குஜெர்மனியில் போதை மருந்துப் பழக்கம் வர வர அதிகமாகிவருகிறது. இத்தகைய பழக்கத்துக்கு ஆளானவர்களால் கார் விபத்துகளும் அங்கு அதிகரித்து வருகின்றன. எனவே போக்குவரத்து விதிகளை மீறிக் காரை ஓட்டுகின்றவர்கள் போதை மருந்து உட்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய பொலிசார் புது முறையொன்றைக் கையாளுகின்றனர்! ஒரு ரசாயனப் பொருளில் தோய்த்த கைக்குட்டை ஒன்றை நீட்டி அதன்மீது மூச்சு விடச் சொல்லுகிறார்கள். மூச்சு விடும்போது கைக்குட்டையின் நிறம் மாறினல் அதனைக்கொண்டு போதை மருந்தை உட்கொண்டுள்ள ஆசாமியைக் கண்டு பிடித்து விடுகின்றனர்! இந்த முறையை இலங்கையில் கையாளத் தொடங்கினல் இ. போ. ச. ஊழியர்களிலேயே பலர் அகப்பட்டுக்கொள்வார்கள் !

னும் பத்துமுறை குடித்தாலும் என் வியாதி நீங்காது'' என்று கருதிக்கொண்டு அருந்தினுல், பத்துநாளில் மாறும் வியாதி, ஒருமாதம் சென்ருலும் ஆருது மாருது!

## தேர்வில் சித்தியடைய

நீங்கள் தேர்வில் சித்தியடைய எண்ணினுல் ''நான் இப்பொழுது நன்ருகப் படிக்கின்றேன்; என்னிடம் மிகுந்த ஞாபக சக்தியுண்டு; நான் கட்டாயம் தேர்வில் சித்தியடைவேன்'' என்று பலதடவை முணுமுணுத்தல் வேண்டும். இப்படிக் கூறிவந்தால் உங்களை அறியாமலே நீங்கள் நன்ருகப் படிப்பீர்கள். உங்கள் உள் மனம் எப்பொழுதும் 'நன்ருக்ப்படி' என்று கட்டளையிடும்; நீங்கள் திறமையாகப் படிப்பதும் உறுதி! சித்தியடைவதும் உறுதி!

இதுபோலவே பற்பல விடயங்களுக்கு சுயவசியமுறையினுல் வெற்றிப்பாதை சமைக்கலாம். ஒன்றைமட்டும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இம்முறையைப் உபயோகிக்கும்போது இதில் பரிபூரண நம்பிக்கை வைத்தல் வேண்டும்; மன நம்பிக்கை இல்லாது இம்முறை உபயோகிப்பட்டால் எதிர்மாருன பலாபலன்கள் ஏற்படவுங்கூடும்' துணிவுடன் — மன நம்பிக்கையுடன்செயல்படுங்கள்! வெற்றி உங்களுடையதே!

'' ஒவ்வொரு நாளும்
எல்லா வகையிலும் — நான்
முன்னேறி முன்னேறி
வருகின்றேன்.''

✣ ஆர். ஆர். பிக்சர்ஸார் தயாரித்து பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ''கூண்டுக்கிளி'' தமிழ் திரையுலகைப் பொறுத்தமட்டில் ஒரு விசேஷமான திரைப்படம்! என்ன



விசேஷம் என்று கேட்கிறீர்களா? — இப்போது இரு துருவங்களாக இருக்கும் சிவாஜியும் எம். ஜி. ஆரும் அந்தப்படத்தில் சேர்ந்து நடித்து இருக்கிருர்கள்! அந்த நாட்களில் இருவருக்குமே சினிமா சான்ஸ்தான் முக்கியமாக இருந்தது! இப்போது அப்படியல்ல, இருவருமே ரொம்ப ரொம்ப வளர்ந்துவிட்டார்கள்!

✣ சில ஸ்தாபனங்களின் கடமைகளைக் கண்காணிப்பதற்கு உத்தியோகப்பற்றற்ற பார்வையாளர்கள்சிலர் நியமிக்கப்பட்டு இருக்கிருர்கள் ஆனுல் இவர்களைப்பற்றியே பல புகார்கள் கிளம்பி இருக்கின்றன. இந்தப் பார்வையாளர்களே ஊழல்கள் பலவற்றுக்கு உடந்தையாக இருக்கிருர்களாம். வேலியே பயிரை மேய்ந்த கதை இது தான்!

✣ தமிழ்நாட்டில் நடைபெறும் சில பொருட் காட்சிகளில் ''ரிகார்ட் டான்ஸ்''என்ற ஒரு ஆபாசமான அம்சமும் இடம் பெறுகிறது. மேலே ஒரு 'ப்ரா' வுடனும் கீழே கால் அங்குலத் துணியுடனும் அரைகுறையாக ஆடைஅணிந்து பின்னணியில் இரட்டை அர்த்தமுள்ள சினிமாப்பாடல் இசைத்தட்டு ஒலிக்க படு ஆபாசமான முறையில் ஒரு பெண் உடம்பை வளைத்து ஆடுவதற்குத்தான் ''ரிகார்ட் டான்ஸ்'' என்று பெயர்! எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் எத்தனையோ வழிகளைக் கையாளுகிறார்கள்! எல்லாநாடுகளிலுமே இப்படிப்பட்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! கண்ணகி பிறந்த தமிழ் நாடும் இதற்கு விதிவிலக்கு அல்ல!

✣ கொலை, கொள்ளை முதலிய மூர்க்கத் தனங்களுக்குப் பெயர்பெற்றது சிக்காகோ நகரம். அங்குள்ள சிறுவர்களும் பெரியகுழப்பக்காரர்கள். அவர்களுக்கென்று விசேட ஊரடங்குச் சட்டம் அந்த நகரத்தில் உண்டு. (Chicago curfew law: for youth under 17. 10-30 p. m Sun. & Thurs. 11-20 p. m Fri. & Sat ) (17 வயதுக் குட்பட்ட இளைஞர்கள் ஞாயிறு-வியாழக்கிழமைகளில் இரவு 10-30 க்குப் பிறகும், வெள்ளி சனிகளில் 11-20 க்குப் பிறகும் வீட்டைவிட்டு வெளியே வரக் கூடாது) என்று சட்டமிட்டு, அதை தபால் உறைகளிலும் அச்சிட்டிருக்கிறார்கள்.

✣ சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய வேணன் அபயசேகரா அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார். சிவில் சேவை அதிகாரியாக இருந்த போதிலும், வேணன் கலைத்துறையில் மிக நாட்டமுள்ளவர். அவருடைய நாடகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் தமிழில் அரங்கேற்றப்பட்டது. அவுஸ்திரேலியாவில் வெள்ளையர் மட்டுமே குடியேற முடியும். இலங்கைப் பரங்கிய இனத்தவரில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வெள்ளை இன இரத்தக் கலப்பு உள்ளவர்கள் மட்டுமே அங்கே குடியேற முடியும்.

✣ இந்த நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக்கொண்டால் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் தோட்டத்தொழிலாளர்கள்! எண்ணிக்கையில் பெருந்தொகையினராக இருந்தும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் இவர்கள் தான்! உண்மையான அந்தரங்க சுத்தியோடு இந்தத் தொழிலாளர்களைப்பற்றிச் சிந்திக்கின்ற நமது தலைவர்கள் யாருமே கிடையாது! தொழிலாளிகளின் தலைவனாக ஒரு தொழிலாளி தான் இருக்கவேண்டும்! அப்போதுதான் அந்தவர்க்கம் முன்னேற முடியும்! தோட்டத் தொழிலாளர்கள் முன்னேறாததற்குக் காரணம் அவர்களின் தலைவர்களாக இருப்பவர்கள் அத்தனைபேரும் முதலாளிகளாக இருப்பதுதான்!

# கேள்வி பதில்

பொ. சிவம், கொழும்பு-2.

■ இலங்கைக்கு சமஷ்டி அரசமைப்பே ஏற்றது என ஒத்துக் கொண்ட கம்யூனிஸ்ட்டுகள் இன்று அதை எதிர்ப்பதேன்?

தனி நபர் லாபத்துக்காக தங்கள் இஷ்டத்துக்கு கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் தமிழ் காங்கிரஸ் வாதிகளைப் போல அல்லாமல், ஒரு திட்டவட்டமான கொள்கையின் அடிப்படையில் தங்களது தந்திரோபாயங்களை மாற்றிக்கொள்ளும் கம்யூனிஸ்டுக்களைக் குறை சொல்ல முடியாது!

"நெல்லித் தமிழரசன்",
நெல்லியடி.

■ ஒரு பெண் நாகரிகமாக இருந்தால் ஒருசிலர் அவளைத் தவருக நினைப்பதற்குக் காரணம் என்ன?

தவருன நடவடிக்கைகளை நாகரிகம் என நினைத்து மயங்கும் பெண்கள்தான் பிறரது தவருன அபிப்பிராயங்களுக்கும் ஆளாகிறுர்கள்!

செல்வி ராஜேஸ்வரி, களனி.

■ என் தோழி ஆண்களுக்கு மீசை தாடி அவசியமா என்று கேட்கிருள்!

ஆண்களுக்கு அவசியமோ இல்லையோ, பெண்களுக்கு அவசியமில்லை என்பது மட்டும் நிச்சயம்!

"சாமிஜி"

'பிரஸ்டீஜ்' ஞானசுந்தரி,
ஆள்கரனேயா.


■ மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற போர்வைக்குள் தங்களை மறைத்துக்கொண்டு மலைநாட்டு மக்களைச் சுரண்டி தங்கள் வயிறு வளர்க்கும் தொண்டமான், அசீஸ் போன்றவர்கள் அடிக்கடி வெளிநாடு செல்வதன் ரகசியம் என்ன? இதனுல் மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன?



இவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்லும்போது ஏதாவது மாநாடு என்று சாக்குப்போக்குச் சொல்லித்தான் வெளிநாடு செல்லுகிறுர்கள்! இவர்களின் இத்தகைய பயணங்களுக்கு ஊராரின் பணம்தான் செலவாகிறது! யோகம் அடிக்கிறது — அனுபவிக்கிறுர்கள்! உங்களைப் போன்று மலையகத்தில் வாழும் புதிய பரம்பரையினர் பலர் இப்போது இவர்களைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்!

ந: தர்மலிங்கம், சாவகச்சேரி:

■ குமாரசூரியர் இன்னும் எவ்வளவு காலத்துக்கு அமைச்சராக இருப்பார்?



அடுத்த தேர்தல் வரும் வரைக்கும் அவர் அமைச்சராக இருக்கப்போவது நிச்சயம்! அடுத்த தேர்தல் எப்போது வரும் என்பதை இப்போதைக்கு யாருமே நிச்சயமாகச் சொல்ல முடியாது!

ஐ. கோமளேஸ்வரி, நெல்லியடி:

■ இலங்கையின் ஆக்க இலக்கியவளர்ச்சி பற்றி தங்கள் கருத்து என்ன?

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் அற்புதமான சாதனைகளைச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை! வளர்ந்த எழுத்தாளர்களைக் காட்டிலும் இளைஞர்களாக உள்ள எழுத்தாளர்கள் தான் இந்த வளர்ச்சிக்குக் காரணமானவர்கள்! 'பெரிய' எழுத்தாளர்கள் அவர்கள் இளைஞர்களாக இருந்த காலத்தில் சாதித்ததில் பத்தில் ஒரு பங்கைக்கூட வளர்ந்தபின் சாதிக்கவில்லையே! எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்களாக இலங்கை எழுத்தாளர்கள் இல்லாததுதான் இதற்குக்காரணம்! வயதாகிவிட்டால் வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலேயே பொழுது போய்விடுகிறது! ஆக்கப் படைப்புகளை உருவாக்குவதற்கான சிந்தனைக்குவேண்டிய வலுவும் நேரமும் கிடைப்பதில்லை! எழுத்தாளர்கள் எழுத்தையே தொழிலாகக் கொண்டிருந்தால் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படும்போது தொடர்ந்து தமது எழுத்தை வளப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு வந்து சேரும்!

மா. பழனி, கண்டி.

■ இந்தியாவில் ஹரிஜனங்கள் இன்னமும் வெகுவாகப் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்களா?

இல்லை! ஹரிஜன முன்னேற்றத்தில் உண்மையாகவே அக்கறை கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது இந்திய அரசு! மத்திய அரசில் ஜகஜீவன்ராமும், தமிழ் நாட்டில் சத்தியவாணி முத்துவும் ஹரிஜன சமுகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் செல்வாக்கு மிகுந்த மந்திரிகளாக இருந்துவருகிறார்கள்! மற்றைய மாநிலங்களிலும் ஹரிஜன சமூகத்தைச்சேர்ந்த பலர் மந்திரிகளாக இருக்கிறார்கள்! இதுதவிர பொறுப்புவாய்ந்த அதிகாரிகளாகவும் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள்! இந்தியா சுதந்திரமடைந்ததன் பின்னர் ஹரிஜனங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் அபாரமானது! இந்திய அரசின் திட்டமிடப்பட்ட செயல்பாடுதான் இந்த வெற்றிக்குக் காரணம்!

வே. ராஜகோபால்,
(பரிசு பெறுபவர்)
மகாவலி எஸ்டேட்,
கொடிகமுவ.

■ மலையக மக்களுக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

மலையக மக்களிடம் உள்ள ஆற்றல் மகத்தானது! அவர்கள் ஒருமுகப்பட்டு சிந்தித்து செயலாற்றினால் அவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை! தங்களிடமுள்ள ஆற்றலை உணர்ந்துகொள்ளத்தவறிய காரணத்தால்தான் அவர்கள் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள்! யாழ்ப்பாணத்து மக்கள் கெட்டிக்காரர்கள் — ஆனால் மிகவும் ஆபத்தான சந்தர்ப்பங்களிலும் கூட மிகவும் பொறுப்பற்ற அப்பட்டமான சுயநலவாதிகளான ஒரு சில அரசியல் கோமாளிகளுக்கு இவர்கள் எக்கச்சக்கமான முக்கியத்துவம் கொடுத்து விடுகிறார்கள்! பொறுப்பற்ற தன்மையின் விளைவுதான் இது! மலையக மக்களுக்கு தங்கள் திறமை தெரியவில்லை! யாழ்ப்பாணத்து மக்களுக்கு தங்கள் பொறுப்புத் தெரியவில்லை!

எஸ். எம். நாதன்,
திருகோணமலை.

■ தமிழரசுக் கட்சியில் உண்டாகிய சலசலப்புகளுக்கு ராசதுரை மட்டுந்தான் காரணமா?

இல்லை! "தங்க" மென்று கணிக்கப்பட்ட ஒருசிலர் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்ற தோரணையில் நடந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்!

எஸ். அருணாசலம், கொழும்பு.


■ இளம்பெண்கள் தவறானவழியில் செல்வதற்கு இந்தக் காலத்து இளைஞர்கள்தான் காரணமென்று ஒரு அரசியல்வாதி பேசியிருக்கிறார். அப்படியானால் இளைஞர்கள் கெட்டுப்போவதற்கு யார் காரணம்?

அரசியல்வாதிகள்!

பி. கே. துரைராஜா,
யாழ்ப்பாணம்.

■ ஜே. ஆர். வெகு விரைவில் யூ. என். பியை விட்டு விலகுவாரா?

'விலகமாட்டேன்' என்றுதான் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்! எவ்வளவுக்கெவ்வளவு இவர் தீவிரமாக 'விலகமாட்டேன்' என்று சொல்கிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு இவர் கட்சியை விட்டு தூர விலகிச் செல்கிறார் என்பதுதான் அர்த்தம்! இலங்கை அரசியலில் ஒரு திடீர் மாற்றத்தைக் கொண்டுவரப்போகின்றவராக ஜே. ஆர்தான் இருக்கப்போகின்றார்!



வி. சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம். என். பாலசுப்பிரமணியன், கொழும்பு 5:

▌ தமிழ்நாட்டில் நடைபெறும் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியை இந்திராகாந்தி கவிழ்த்துவிடுவாரா ?



மாட்டார்! இந்திராகாந்தியை விட கருணாநிதி அரசியல் சாணக்கியத்தில் கெட்டிக்காரர்! இந்த உண்மை இந்திரா காந்திக்கும் தெரியும்!

வேலின் செல்வன், யாழ்நகர்:

▌ தமிழ்மக்கள் மத்தியில் சாதி வெறியை ஊட்டிய அடங்காத்தமிழர் சுந்தரரை தமிழரசுக் கட்சியினர் தமிழ்க் கட்சித் தலைவரென்று கூட்டு முயற்சிகளுக்கு அவரை அணுகுவது முறையானதா?

மாவிட்டபுரத்தில் சுந்தரலிங்கம் நடந்துகொண்ட முறை தமிழ் மக்கள் அத்தனை பேருக்குமே அவமானம் தரும் ஒரு விஷயமாகும்! இப்படிப்பட்டவர்களையும் தமிழ்க் காங்கிரஸ் வாதிகளையும்தான் தமிழ்மக்கள் ஒதுக்கிவைத்து புதிய தீண்டத்தகாதவர்களாக ஆக்க வேண்டும்! அந்த நிலை விரைவிலேயே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

▌ "ராஜா" படம் பார்த்தீர்களா?

பார்த்தேன்! நடிப்பிலேதான் ஒரு ராஜாதான் என்பதை நிரூபித்திருக்கிறார் சிவாஜி!

எஸ். செல்லையா, நல்லூர்:

▌ 'விரதம்' இருந்தால் நினைத்த பலன் கிடைக்குமா?

நீங்கள் நினைக்கின்ற பலன் கிடைக்குமா என்பதைச் சொல்லமுடியாது! ஆனால் விரதம் இருப்பது நிச்சயமாக உடம்புக்கு நல்லது! 'மாதத்தில் ஒரு நாளாவது முழுப் பட்டினியாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் உடல் நலம் சீராக இருக்கும். ஆயுள் அதிகமாகும்' என்று மருத்துவ அறிஞர்கள் பலர் இப்போது கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்!

எஸ். ராஜா, கொழும்பு. 14.

▌ நாடக நடிகர்களை வெள்ளியில் அறிமுகப்படுத்தக் கூடாதா?

நாடக நடிகர்களின் புகைப் படங்களுடன் கூடிய உண்மையான குறிப்புக்களை சுவையான முறையில் எழுதி அனுப்பினால் பிரசுரம் செய்வோம்!

எம். ஏ. ரமீம், மாத்தளை.

▌ நமது நாட்டில் 'ஜனநாயகம்' எந்த நிலையில் இருக்கிறது?

இங்கே 'சோஷலிஸம்' எந்த நிலையில் இருக்கின்றதோ, அதே நிலையில்தான் 'ஜனநாயக'மும் இருக்கிறது! இது "ஜனநாயக சோஷலிஸ" நாடு அல்லவா?

எஸ். பத்மாவதி, கோப்பாய்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் உருவாகியுள்ள புதிய உறவு நீடித்து வளர முடியுமா?

இல்லை! படு அப்பட்டமான சுயநலத்தின் அடிப்படையில் உருவான உறவு இது! தனி மனித சுதந்திரத்துக்கு பெரு மதிப்பு அளிக்கும் நாடு அமெரிக்கா! தனிமனித சுதந்திரத்தை கிள்ளுக்கீரையாக நினைக்கும நாடு சீனா! இந்த இரு நாடுகளுக்கும் இடையில் எப்படி நிரந்தரமான நட்பு உண்டாக முடியும்?

த. தயாநிதி, பெல்மதுளை.

தமிழரசுக்கட்சியின் தலைவர் செல்வநாயகத்தைப் பற்றி சில வரிகள் கூறுவீர்களா?

'எப்படியாவது வாழ்ந்தால் போதும்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காது 'இப்படித்தான் வாழ்வேன்' என்ற உறுதியானதொரு கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருவதன் காரணமாக அரசியல் எதிரிகளினாலும் நன்கு மதிக்கப்படுபவர்!

க. பத்மநாபன், திருநெல்வேலி.

வேறு சாதியில் கலியாணம் செய்யலாமா?

செய்யலாம்! வருகின்றவள் 'பேய்ச்சாதி'யாக இல்லாமல் 'பெண்சாதி'யாக இருந்தால் சரிதான்!

க. அமிர்தவல்லி, மானிப்பாய்.

கலியாணத்தின்போது ஓமம் வளர்ப்பது எதற்காக?

எதிர்காலத்தில் குடும்ப வாழ்வில் ஏற்படக்கூடிய புகைச்சல்களை முன்கூட்டியே தெரிவிப்பதற்காக!

சி. செல்லமுத்து, கண்டி.

ஆண்களா அல்லது பெண்களா கெட்டிக்காரர்கள்?

கலியாணமாவதற்கு முன்னால் ஆண்கள் கெட்டிக்காரர்கள்! கலியாணமானதற்குப் பின்னால் பெண்கள் கெட்டிக்காரர்கள்!

பி. சிவகுமார்,
யாழ்-இந்துக்கல்லூரி.


தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் 'தந்தை' என்று சிறப்பித்துக் கூறப்படுவது ஏன்?

தமிழரசுக்கட்சியின் கொள்கைகள் பிறப்பதற்குக் காரணமாக அவர் இருந்தமையினால்!

எஸ். செல்வந்திரநாதன்,
மட்டக்களப்பு.

அறிஞர் அண்ணா தமிழ் மக்களுக்கு விட்டுச்சென்ற அரசியல் தத்துவம் யாது?

''உரிமைக்குக் குரல்கொடுப்போம் உறவுக்குக் கை கொடுப்போம்'' என்பதுதான் அண்ணாவின் தத்துவம்! இதன் அடிப்படையில் அமைந்ததுதான் ''மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி' என்ற தி. மு. க. வின் கோரிக்கை!



**கி. வல்லிபுரநாதன், கொழும்பு:**

சீனா இந்தியாவுடன் இனிச் சண்டைக்கு வரமாட்டாதா?

சொல்ல முடியாது! மாவோவின் சிந்தனைகள் திடீர்த் திருப்பங்களுக்கு இடமளிக்கக் கூடியவை! இந்தியாவின் வடக்கு



எல்லையில் மிகமிக நவீனமான சாதனங்களுடன் கூடிய ஒரு ராணுவ தளத்தை இப்போது சீனா கட்டிக்கொண்டு வருகிறது!

**ஆர். சொலமன், குருநாகல்.**

பஸ்கட்டணங்களை உயர்த்திய பின்னரும் இ. போ. ச. பழைய நிலையிலேயே இருப்பது ஏன்?

பழைய நிலையில் இருந்தால் பரவாயில்லையே! நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டல்லவா வருகிறது!

**சி. கனகசபாபதி,**
**வெள்ளவத்தை.**

ஆடம்பரமான பணக்காரப் பெண்கள் கணவனை மதிப்பதில்லை என்பது உண்மையா?

அவர்களது மதிப்பில் அவர்கள் வளர்க்கும் நாய்க்குத்தான் முதலிடம் அளிக்கிறார்கள் என்பது உண்மை!

ஹிந்திப் பட இசை அமைப்பாளர்களில் இப்போது முன்னணியில் இருக்கும் இரட்டையர்கள் கல்யாண்ஜி ஆனந்த்தி சகோதரர்கள். இவர்களில் மூத்தவர் கல்யாண்ஜி, இவருக்கு வயது நாற்பத்திரண்டு. இளையவர் ஆனந்த்ஜி இவருக்கு வயது முப்பத்தேழு. இவர்களின் தகப்பனார் ஒரு சில்லறைக் கடை வியாபாரி, இவர்கள் இருவரும் தகப்பனாரின் கடையில் வேலை செய்து வந்தவர்கள், ஓய்வாக இருக்கும் நேரங்களில் வீண்பொழுது போக்காமல் இசைத் துறையில் ஆர்வம் காட்டி வந்தார்கள். இவர்களின் முயற்சி வீண்போகவில்லை. இப்போது லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள்!

'ஜனநாயகத்துக்கு சாவு மணி அடிக்கும் மசோதாக்கள்' என்று பத்திரிகைகளின் ஏகோபித்த கண்டனத்துக்கு உள்ளானதும், எதிர்க்கட்சியினராலும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் ஒன்றாகிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பகுதியினராலும் பலமாக எதிர்க்கப்பட்டதுமான இரண்டு மசோதாக்களை அரசாங்கம் விடாப்பிடியாக மிகவும் அவசரமாக நிறைவேற்றி இருக்கிறது! குற்ற விசாரணை நீதிக் கமிஷன் மசோதா என்ற பெயர் பெறும் இம் மசோதாவின் துணைகொண்டுதான் சென்ற ஆண்டு அரசாங்கத்துக்கு எதிராக புரட்சியில் இறங்கிய வாலிபர்களையும், அந்நியச் செலாவணி மோசடியில் ஈடுபட்டு நாட்டையும் அரசாங்கத்தையும் ஏமாற்றிய பல பெரிய மனிதர்களையும் அரசாங்கம் விசாரணைக்குக் கொண்டு வரப்போகின்றது!

✣ இந்திப் படவுலகில் சக்கை போடு போட்டுவரும் தமிழ் பெண்ணான ஹேமமாலினி ''பரத நாட்டியத்தின்மீதுதான் நான் அதிக அன்பு கொண்டிருக்கிறேன். அந்தப் பரத நாட்டியம்தான் என்னை சினிமாவுக்கு கொண்டுவந்தது. சினிமாவில் ஏதோ ஒரு மின்னும் தாரகையாக இருந்துவிட்டுப் போவதை நான் விரும்பவில்லை. நடன நட்சத்திரமாகத் திகழுவதைத்தான் நான் விரும்புகிறேன்'' என்று பேசியிருக்கிறார். இவரது புகழுக்குக் காரணம் இவர் நடன நட்சத்திரமாக இருப்பது அல்ல! கவர்ச்சி நட்சத்திரமாக இருப்பதுதான்!

✣ தனது தேவைகளுக்கு பணம் தேடுவது என்ற ஆர்வத்தையும் நியதியையும் மீறி பணம் தேடுவதையே லட்சியமாகக் கொண்டு வாழ்பவர்கள் ஒரு பக்கம்! அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்து கொள்ள முடியாமல், உழைத்தும் அந்த உழைப்பின் பலன் ஒழுங்காக வந்து சேராமல் கஷ்டப்படும் ஏழைகள் இன்னொரு பக்கம்! இந்த இரு சாராரும் சமத்துவமான முறையில் சந்திக்க முடியும் போதுதான் இந்த நாட்டிலுள்ள பிரச்சனைகள் தீர முடியும்!

✣ இன்று சிறந்த நகைச்சுவை எழுத்தாளராகக் கருதப்படுபவர் ஆர்ட் புச்வால்ட்! இவர் 'நியூயோர்க் ரைம்ஸ்' இதழில் வாரத்தில் மூன்று நாட்களுக்கு நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதிவருகிறார். இப்படி 1949-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து எழுதிவருகிறார். இதுவரை 4000-க்கும் மேற்பட்ட கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார் இவரது கட்டுரைகளை உலகில் சுமார் 500 பத்திரிகைகள் வெளியிடுகின்றன. எழுத்தாளராக இருந்து இவர் சம்பாதிக்கும் தொகை எவ்வளவு என்று கேட்காதீர்கள். சொன்னால் மூர்ச்சையாகி விழுந்துவிடுவீர்கள்!

✣ இந்திரா காந்தி சில சமயங்களில் ஓய்வு எடுப்பதற்காக எங்காவது ஒரு மலைப்பிரதேசத்திற்கு போகிறார். ஆனால் இவர் எங்கே போனாலும் ஒவ்வொரு நாளும் டெல்லியில் உள்ள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிந்து கொள்கிறார். உள்நாட்டுச் செய்திகளை மட்டுமல்லாது உலகச் செய்திகளையும் அறிந்துகொள்கிறார். செய்திகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் சரியாகவும் தெரிவிப்பதற்காக இவர் பல உதவியாளர்களை நியமித்து வைத்திருக்கிறார்.

✣ கழகப் பிரச்சாரத்திற்காக பல நாடகங்களை எழுதித் தயாரித்ததோடு நில்லாது சில நாடகங்களில் தானே கதாநாயகனாகவும் நடித்திருக்கிறார் தமிழக முதல்வர் கருணாநிதி! 'உதயசூரியன்' என்ற நாடகத்தில் கருணாநிதி கதாநாயகனாக நடித்தபோது அவருக்கு ஜோடியாக கதாநாயகியாக நடித்திருக்கிறார் இப்போது சினிமா நடிகையாகவுள்ள மனோரமா! நாடகத்தில் நாயகனாக நடித்தவர் இன்று நாட்டின் நாயகனாகிவிட்டார்! நாடகத்தில் நாயகியாக நடித்தவரோ சினிமாவில் கூட நாயகியாக முடியாது சிரிப்பு நடிகையாகத்தான் இருக்கிறார்!

# மண்ணு
# ஓசைக

மீண்டும் செய்திகளில் வியத்நாம் முதலிடம் வகிக்கிறது. சின்னஞ் சிறிய ஒரு நாடு மாபெரும் வல்லரசு ஒன்றின் இராட்சஸ பலம் அத்தனையையும் எதிர்த்துச் சமாளிப்பது மட்டுமன்றி வெற்றியும் ஈட்டுவதை எண்ணி வியக்காமல் இருக்க இயலாது.

வியத்நாம் முழுவதுமே — குறிப்பாக வடவியத்நாம் முழுவதுமே — யுத்தகளமாக இருக்கும் வேளையில் கலை, இலக்கியம், கல்வி, கைப்பணி முதலியவற்றுக்கு அதிகம் வாய்ப்பிருக்காது என்றே பொதுவாக எண்ணத் தோன்றும். இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, பிரெஞ்சுப் பத்திரிகை நிருபர் ஒருவர் வடவியத்நாமில் பிரயாணஞ் செய்துவிட்டு, எழுதிய விவரணக் கட்டுரை ஒன்றின் சாரம் நண்பர் ஒருவர் மூலம் எனக்குக்கிடைத்தது.

யுத்த நடவடிக்கைகள், எதிரிகளின் இடைவிடாத ஆக்கிரமிப்புகள், ஓயாத குண்டுத் தாக்குதல்கள் ஆகியவற்றின் மத்தியில் முன்னெப்பொழுதுமில்லாத வேகத்துடன் அறிவிலக்கியமும் ஆற்றலிலக்கியமும் செழித்து வளருகின்றன. முதலில், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடந்த போராட்டத்திலே ஒரு தலைமுறை எழுத்தாளரும் கலைஞரும் உருவாகினர்; பின்னர் இரண்டாவது கட்டத்திலே, வடவியத்நாமில் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கும் பெரும்பணியிலே இன்னொரு தலைமுறையினர் உருவாகினர்; இப்பொழுது அந்நிய ஏகாதிபத்தியத்தின் அநாகரிகமான ஆக்கிரமிப்புக்கு எதிரான புனித தேச விடுதலைப் போரிலே புடம் போட்டு எடுத்த பொன் போல் ஒளிரும் மற்றுமொரு தலைமுறையினர் உருவாகி வருகின்றனர்.

இச் செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தபொழுது எனக்குப் பழந்தமிழிலக்கியங்கள் சிலவற்றின் நினைவே வந்தது. ''சங்ககாலத் தமிழ் மறவர்களின் வீரம்'' என்றெல்லாம் எமது இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் அடிக்கடி கூறிக்கொள்ளுகிறார்களே, அதன் நிதர்சன வடிவத்தை இன்றைய வியத்நாமிய இலக்கியத்தில் காண முடியும். பண்டைக் காலத்திலே யானை எத்தகையநிலையை வகித்ததோ அத்தகைய நிலையையே நவீன யுத்தத்தில் டாங்கி வகிக்கிறது. யானைகளைக் கொன்ற வீரனைப்பாராட்டியதுபோலவே டாங்கிகளை அழித்த வீரர்கள் விழுமிய புகழுக்குரியவராகின்றனர்.

மூன்று சிறப்பியல்புகளை இன்றைய வியத்நாமிய கலை - இலக்கிய எழுச்சியில் காணக்கூடியதாக உள்ளது.

முதலாவது: இலக்கியத்துக்கும் வாழ்க்கைக்கும் பிரிக்கவியலாத பிணைப்பு ஏற்பட்டிருக்

# லகத்து
# ள்

கலாநிதி க. கைலாசபதி

கிறது. உதாரணமாக, பான்-தியென் - துவாற் என்ற இளங் கவிஞன் 1969-ம் ஆண்டின் சிறந்த பாவலனைத் தேர்ந் தெடுக்கப்பட்டான். எனினும், பரிசளிப்பு விழாவில் அவன் கல ந்துகொள்ள முடியவில்லை; காரணம், துரொங்சொன் மலைச் சாரலிலே அவன் போர்ப்பணியில் ஈடுபட்டிருந்தான்.

இரண்டாவது: ஆக்க இலக்கியங்கள் மாத்திரமல்லாது பல திறப்பட்ட ஆய்வு நூல்களும் வந்துகொண்டிருக்கின்றன. வியத்நாமிய வரலாற்றுக்கு இன்றியமையா மூலாதார நூல்கள் பற்றிய கணக்கெடுப்பு நூல் ஒன்று அண்மையில் வெளிவந்தது. ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சியின் பயனாய் உருவாகியுள்ள இப்பாரிய நூலைப் பிரெஞ்சு அறிஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். பூர்வீக வரலாறு, அகழ்வாராய்ச்சி முதலியன சம்பந்தமாகவும் அப்பழுக்கற்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்திருக்கின்றன; அறிவுக்குப் பஞ்சமில்லை.

மூன்றாவது: கிராமப் புறங்களில், மூலை முடுக்குகளிலெல்லாம், கலை - இலக்கியப் போட்டிகளும், விவாதங்களும் நடை பெறுவதால் இலக்கிய ஆக்கத்தினதும், திறனாய்வினதும் தரம் சதா உயர்ந்துகொண்டிருக்கிறது: அதைப் போலவே போராட்டத்தின் போது நாடு முழுவதும் செல்லும் இலக்கிய ஆர்வமிக்க போர்வீரர்கள், ஆங்காங்கு வழங்கும் எண்ணற்ற மக்கள் பாடல்களை - கிராமிய வாய்மொழி இலக்கியங்களையும், கதைகளையும் சேகரித்து அத்துறையில் மேலும் ஆய்வுகளுக்கு வழிவகுக்கின்றனர். வெவ்வேறு குக்கிராமங்களில் ஒரு சில மக்களிடையே வழங்கிய நாட்டுப் பாடல்கள் பல, இன்று தேச முழுவதும் பிரபல்யமாகியுள்ளன.

அண்மைக் காலத்தில் அமெரிக்க இராட்சஸ பி. 52 குண்டு வீச்சு விமானங்களும் ஏனைய சிறிய விமானங்களும் இரவு பகலாக வடவியத்நாம் மீதும், தெற்கிலும், இரு பகுதிகளையும் தொடுக்கும் நெடுஞ்சாலைகளிலும் குண்டு மழை பொழிந்து வருகின்றன. இளங் கவிஞன் தியென் - துவாற் இச்சூழ்நிலையில் பாடியிருக்கும் சில அடிகளை வசன ரூபத்தில் தருகிறேன்:

''அந்த லொறிக்கோ,
வெளிச்சம் கிடையாது;
வீசியடிக்கும் காற்றைத்
தடுக்கும்
முன் கண்ணாடியும்
கிடையாது;
தலைக்குமேலே 'கூரை' யும்
இல்லை;
நேற்றைய குண்டு
வீச்சுகளிலே
லொறியின் உடல் முழுவதும்
ஓட்டைகள் விழுந்தன;
ஆயினும் என்ன ?
பரவாயில்லை !

அது தெற்கு நோக்கிப்
போய்க் கொண்டுதானிருக்
கிறது.
சாரதியின் ஆசனத்திலே
உயிர்த்துடிப்புள்ள இதயம்
ஒன்று இருந்தால் போதும்'.

செயலூக்கமும், தியாகசிந்தையும், எதிர்காலம் பற்றிய நன்னம்பிக்கையும் தான், இன்றைய வியத்நாமிய கலைஞர்கள் கருத்தும் கவினும் நிறைந்த படைப்புக்களை ஆக்க ஏதுவாக உள்ளன. டோ-சு என்பவரின் அஸ்தமனத்தின் பிரகாசம், ட்ரியூ-பொன் என்பவரின் வாழ்க்கை விதை ஆகிய நாவல்களைப் படிப்போருக்கு, இத்துணை நம்பிக்கை வியத்நாமிய எழுத்தாளருக்கு எங்கிருந்து வருகிறது என்னும் மலைப்பும் வியப்பும் ஏற்படாமல் போகா. இந்தச் சூழ்நிலையில் புதியதொரு தேசிய இலக்கியம் வியத்நாமில் உருவாகிறது. எதிர்காலத்தில் ஆசிய இலக்கிய அரங்கில் வியத்நாமியப் படைப்புக்கள் சிறப்புமிக்க ஸ்தானத்தைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. பலமான அத்திவாரத்தின்மீது அவை இப்பொழுது உருவாகிக்கொண்டிருக்கின்றன.

---

✣ பயங்கரமான விபத்துக்களில் சிக்கும் பெண்கள் சிலர் உடல் தேறியதும் ஆண்களாக் மாறிவிடுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மூளை பாதிக்கப்பட்டால் பெண்களுக்கான குணங்கள் போய், ஆண்களுக்கான குணங்கள் இவர்களுக்கு வந்துவிடுகிறதாம்!

✣ உடம்பை வளைத்து வேலை செய்யாமலே உட்கார்ந்த இடத்திலிருந்து கொண்டு ஊதியம் பெற விரும்புகிறவர்களே நமது மத்தியில் அதிகம் பேர் இருக்கிறார்கள். இவர்களிலும் ஏய்த்துப் பிழைப்பவர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வேலை நேரத்தில் தமது கடமையைச் சரிவரச் செய்யாது இருந்து விட்டு ''ஓவர்ரைம்'' அடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்களையும் இந்தக் கொள்ளைக்காரர் வரிசையில் தான் சேர்க்க வேண்டும்!

---




✣ இன்றைய அரசாங்கத்துக்கு கடந்த பொதுத் தேர்தலின் போது தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தமது அமோக ஆதரவை அளித்தனர். ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் தொழிலாளர் நலனுக்கான பல அம்சங்கள் சேர்க்கப்பட்டு இருந்தன. தமது வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுமென தொழிலாளர்கள் நம்பினார்கள். விலைவாசி உயர்வு குறைவடையும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த நாட்டு நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருந்த பிற்போக்கு சக்திகளின் கொட்டம் அடக்கப்பட்டு உண்மையான முற்போக்கு நிர்வாகம் ஏற்படும் என்று பெரும்பாலானோர் கனவு கண்டார்கள். 'சொல்வது யார்க்கும் எளிது' என்ற வாசகத்தின் உண்மை இப்போதுதான் எல்லாருக்கும் தெரிகிறது!

✣ சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாடக உலகின் சக்கரவர்த்தியாக விளங்கியவர் எஸ். ஜி. கிட்டப்பா. கே. பி. சுந்தராம்பாளின் கணவர் இவர். இவருடன் கூடப் பிறந்த இரண்டு சகோதரர்களும் நாடகம் ஆடியவர்கள். ஒரே குடும்பம். ஒரே சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். ஆயினும், கிட்டப்பாவின் புகழில் நூறில் ஒன்றுகூட அவருடைய சகோதரர்கள் சுப்பையாவுக்கும் செல்லப்பாவுக்கும் கிடைக்கவில்லை! பாரம்பரியம், சூழல் இரண்டையும் விட்டு ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட 'சுழி'யும் இருக்கத்தான் செய்கிறது!



✣ இந்திரா காந்திக்கு இப்போது 55 வயது ஆகிறது. பார்த்தால் அப்படியா தோற்றம் தருகிறார்? இல்லை! பணமும் வசதியும் இருந்தால் உடல் இளமையைக் கூட நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கலாம்!

✣ இந்தி நடிகர் ராஜ்குமாருக்கு பரிசு பெறுவது என்றால் பிடிக்காத ஒரு விஷயம். பலமுறை அவர் தன்னைச் சிறந்த நடிகராகத் தேர்ந்து எடுத்து அளிக்கப்பட்ட பரிசுகளை வேண்டாம் என்று மறுத்து இருக்கிறார்! "நான் நடிக்கிறேன். எனக்குத் தரப்படும் பாத்திரங்களை ஒரு நடிகன் என்ற அளவில் நியாயப்படுத்தி நான் அதற்கேற்ப நடிக்கிறேன். என் நடிப்பை மற்றவர்கள் புகழ்வதோ புகழ்ந்து பரிசு தருவதோ எனக்குப் பிடிக்காது. எனது நடிப்பைச் சிறந்த நடிப்பு என்று சொல்லும் தகுதி மற்றவர்களுக்கு இல்லை. எனவே, மற்றவர்கள் தரும் பரிசை நான் ஏற்பதில்லை" என்று மிகவும் ஆணித்தரமாகச் சொல்லுகிறார் இந்த நடிகர்! கலைஞனுக்கு கர்வம் இருக்க வேண்டியதுதான். ஆனால் இது கொஞ்சம் 'ஓவரா'ன கர்வம்!



✢ ஜெயலலிதா ஒவ்வொரு நாளும் காலையில் 5-30 மணிக்கு எழுந்திருக்கிறார். காலையில் ஒருமணிநேரம் உடம்பை வில்லாக வளைத்து நடன ஒத்திகை செய்கிறார். அன்று செய்யவேண்டிய வேலைகள் என்னென்ன என்பதற்கு ஒழுங்காக ஒரு குறிப்புத் தயாரித்துக் கொள்கிறார். அதன்படியே அன்று முழுவதும் நடக்கிறார்! புகழும் பணமும் சேர்ந்தால் போதாது! சரியான முறையில் திட்டமிட்டு ஒவ்வொருநாள் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொண்டால்தான் பணத்தையும் புகழையும் காப்பாற்ற முடியும்! இந்த உண்மை ஜெயலிதாவிற்கு நன்கு தெரிநது இருக்கிறது!

✢ தமிழ் மக்களின் முன்னேற்றத்தற்கு தடையாக இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பல்வேறுவகையான வேறுபாடுகள்தான்! இந்த வேறுபாடுகளில் குறிப்பிடத்தகுந்தது சாதி வேறுபாடு! தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சாபக்கேடாக இருந்துவரும் இந்த வேறுபாட்டை எப்பாடுபட்டாயினும் ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதில் தமிழகத்திலுள்ள தி. மு. க. அரசு மிகவும் தீவிரமாக செயல்பட்டு வருகிறது! சாதி விட்டுச் சாதி கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள நிலமும் ஒரு சிறு தொழில் தொடங்கி நடத்துவதற்கு தேவையான பணமும் தமிழக அரசினால் அளிக்கப்பட்டு வருகின்றன! சாதி என்னும் சாபக் கேட்டை ஒழிப்பதற்கு கலப்புத் திருமணம்தான் சரியான மார்க்கமாகும்!

✢ அமெரிக்காவிலுள்ள பண்டவிற்பனைக் கூடங்களில் தற்பொழுது நூதனமான திருட்டுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. திருட வந்தவர்கள் பண்டங்களை ஒன்றும் திருடுவது கிடையாது. ஆனால் விலைஉயர்ந்த பொருட்களில் உள்ள விலைப் பட்டியலை எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக குறைந்த விலைப் பொருட்களிலுள்ள விலைப் பட்டியலை எடுத்து அதில் மாட்டி விடுவார்கள்! பின் என்ன — விலை உயர்ந்த பண்டங்களை குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள்! எப்படிக் கெட்டித்தனம்?

✢ புதுடில்லியில் 'தேசிய நாடகப் பள்ளி' என்று ஒன்று இருக்கிறது. நடிப்பு, நாடகத் தயாரிப்பு, டைரக்ஷன், ஒப்பனை, அரங்கஅமைப்பு, ஒலிஒளி அமைப்பு, உரையாடல், உச்சரிப்பு முதலிய பல துறைகளிலும் இப்பள்ளியில் பயிற்சியளிக்கிறார்கள். கிட்டத்தட்ட நான்கு மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இங்கே கடமையாற்றுகிறார்கள். ஈழத்தில் தமிழ் நாடகத்துறை – சினிமாத்துறை முன்னேறுவதற்கு இந்தமாதிரி முறையான பயிற்சிகள் இருந்தால் மிக உதவியாக இருக்கும்!



✣ சமாதான நீதிபதிப்பட்டம் மலிந்துவிட்ட காலமிது. ஆனாலும் வலி-மேற்குப்பகுதிப் பதிவுகாரர் சுழிபுரம் திரு. அ. சின்னையாவுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு: இரண்டாவது உலகயுத்தகாலத்தில் 'புரட்சிக் காரர்களான' என். எம். பெரேரா, கொல்வின் முதலிய வர்கள் சிறையை உடைத்துக் கொண்டு இந்தியாவுக்கு மறைந் தோடி வாழ்ந்தபோது. சென் னையில் அவர்களுக்கு மிக ஆத ரவாக இருந்தவர் சின்னையா. இவர் சமாதான நீதிபதியான தைப் பாராட்டி வழக்கம்பரை ச. ச. நிலையத்தினர் வெளி யிட்ட சிறப்பு மலரில் கொல் வினே இந்தத் தகவலை வெளி யிட்டிருக்கிறார்.

✣ பொழுது போகவில்லையே என்று கவலைப்படுகின்றவர் கள் பலர்! செய்யவேண்டிய வேலைகளைச் செய்து முடிப்ப தற்கு பொழுது போதவில்லையே என்று கவலைப்படுகின்றவர்கள் வேறு சிலர்! 'பொழுதைப் பய னுள்ள பொழுதாகக் கழிப்ப வனும் மற்றவர்களைப் பய னுள்ள பொழுதாகக் கழிக்கச் செய்பவனுமே மனிதன்' என்று கூறுகிறார் உலகப் புகழ்பெற்ற கவிஞர் லோங்பெல்லோ!

✣ இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் சுமார் 50 லட் சம் மக்கள் புற்று நோயினால் இறந்து வருகிறார்கள். ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சை பெறத் தொடங்கியிருந்தால் இவர்களில் பெரும்பாலானோர் உயிர்பிழைத்திருப்பார்கள். இப் போது உலகில் மிகவும் கொடிய வியாதியாகக் கருதப்படுவது புற்றுநோய்தான். இந்தப் புற் றுநோய் ஆராய்ச்சி விஷயத்தில் தமிழ்நாடு அரசாங்கமும் மிக வும் தீவிரமான ஆர்வம் காட்டி வருகிறது. மறைந்த அறிஞர் அண்ணாவின் நினைவாக தமிழ் நாடு அரசாங்கத்தின் ஆதர வில் நடைபெற்று வரும் "அறி ஞர் அண்ணா ஞாபகார்த்த புற்று நோய் ஆராய்ச்சி நிலையம்" காஞ்சிபுரத்தில் இருக்கிறது. இந்தக் கொடிய வியாதிதான் அண்ணாவின் உயிரையும் பலி கொண்டது!

✣ அபிவிருத்தி அடையாத கிராமப்பகுதிகளில் திறமை மிகுந்த அரசாங்க அதிகாரிகள் சேவை செய்யத் தயங்குவத னால் விவசாயம், கைத்தொழில், மருத்துவம், கல்வி ஆகிய எல் லாத்துறையிலுமே அப்பகுதி கள் என்றென்றும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன! இந்நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும்! இப்படியான இடங் களில் சேவை செய்பவர்களுக்கு விசேட அலவன்ஸ் வழங்குவ தன் மூலம் இந்தப் பிரச்சினை யைத் தீர்க்கலாம்!

✣ குழந்தைகளுக்கு என்று வெளிவரும் கதைப் புத்தகங்களை மேல் நாட்டில் பெற்றோர்கள் அடிக்கடி வாங்கித் தமது குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். ஆகையால் அங்கே குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்கள் நிறைய வெளிவருகின்றன. இங்கேயுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு புத்தகமே வாங்கிக் கொடுப்பதில்லை. இதனால்தான் இங்கே குழந்தைகளுக்கான புத்தகங்கள் அவ்வளவாக வெளிவருவது கிடையாது! குழந்தைகள் கெட்டிக்காரர்களாக வரவேண்டும் என்று விரும்பும் பெற்றோர் சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தை அவர்களிடம் வளர்த்து வர வேண்டும்!

✣ சட்டக் கல்லூரியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே அரசியலில் பிரவேசித்தவர் சீனிவாசன் என்ற இளைஞர்! ''கிங் மேக்கர்'' என்ற பெயரோடு புகழின் உச்சியில் காமராசர் இருந்தபோது விருதுநகர் தொகுதியில் அவரோடு போட்டியிட்டு காமராசரை மண்கவ்வச் செய்தவர் சீனிவாசன்! இந்த சீனிவாசன் இப்போது தமிழ்நாடு சட்டசபையில் உதவி சபாநாயகராக இருக்கிறார்! இவருக்கு சமீபத்தில் திருமணமாகி இருக்கிறது! இவர் யாரைத் தெரியுமா திருமணம் செய்திருக்கிறார்? ஸ்ரீதர் தயாரித்த 'தேன்நிலவு' என்ற படத்தில் கதாநாயகியாக வசந்தி என்ற பெயருடன் ஒருவர் நடித்தாரே, அவரைத்தான்! தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் அரசியலுக்கும் சினிமாவுக்கும் உறவு அதிகம்!

✣ தமிழரசுக்கட்சி அரசியல் வாதகளின் நெருங்கிய நண்பர்களாக உள்ள சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருக்கிறார்கள்! இவர்களுள் முதன்மையானவர் பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சராகவுள்ள கே. பி. ரத்நாயக்கா! இவர் ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர்; மிகவும் சரளமாக தமிழ்பேச வல்லவர்! ரத்நாயக்காவுக்கு மிக நெருக்கமானவரான அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்காவுக்கும் தமிழரசுக்கட்சி அரசியல் வாதிகளில் பலர் மிக நெருங்கிய நண்பர்களாக இருக்கிறார்கள்! ஐக்கிய முன்னணி



அரசாங்கத்தில் இடதுசாரி வலதுசாரி கோஷ்டிப் பூசல் வலுவடைய வலுவடைய இந்த நட்புறவும் வளர்ந்து கொண்டே போகும்!

✣ கோடரியைக் கொண்டு சந்தன மரத்தை வெட்டினால் என்ன நடைபெறும்? சந்தன மணம் கோடரியிலும் வீசும்! இதைப் போலத்தான் நல்ல மனிதர்களும்-தங்களுக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்வார்கள்!

✣ தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக அமிர்தலிங்கம் கொடுத்த ராஜினாமாக் கடிதத்தை கட்சியின் செயற்குழு ஏற்றுக்கொண்டு இருக்கிறது! புதிய பொதுச் செயலாளராக கோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறார்! மிக மிகத் தீவிரவாதியான ஒருவரின் கையிலிருந்து மிகவும் அமைதியான ஒருவரின் கைக்கு பொதுச் செயலாளர் பதவி போய்ச் சேர்ந்திருக்கிறது! கதிரவேற்பிள்ளைக்கு விரோதமானவர்கள் யாருமே கிடையாது! கட்சிக்கு உள்ளேயும் கிடையாது; கட்சிக்கு வெளியேயும் கிடையாது! செல்வநாயகத்தின் கொள்கைகளுக்கு அட்சரம் பிசகாத வாரிசு அமிர்தலிங்கம்! செல்வநாயகத்தின் குணநலன்களுக்கு அப்படிப்பட்ட வாரிசு கதிரவேற்பிள்ளை!

✣ தமிழக முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சென்ற மாதம் காலமாகி விட்டார்! தி. மு. க. தலைவர்களின் நெருங்கிய நண்பரான இவர் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிகுந்தவர்! முன்னர் ஒரு நேரத்தில் இந்திய சுதந்திரம் பெற்ற சந்தர்ப்பத்தில் இந்திய அரசியல் சட்டத்தை வரைந்த குழுவிடத்தில் இந்தியா முழுவதற்குமே ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய தகுதி பெற்றது தமிழ்மொழி மட்டுமேதான் என்று எடுத்துக் கூறியவர் இவர்!

✣ இன்று நம்நாடு பொருளாதார நிதி நெருக்கடி ஒன்றில் முகம் கொடுத்து நிற்கிறது. விலைவாசிகள் மிகவும் பயங்கரமான முறையில் ஏறி வருகின்றன. அத்தியாவசியப் பொருட்களைத்தானும் மக்களுக்கு வழங்க முடியாத அளவுக்கு இந்த நெருக்கடி உக்கிரமாகியுள்ளது. சோஷலிஸம், முதலாளித்துவம், கம்யூனிஸம், தனியார் உரிமை என்று ஏதேதோ வெல்லாம் கூறி கோஷம் போட நமது அரசியல் வாதிகளுக்குத் தெரிகிறதே தவிர நல்ல நிர்வாகம் செய்து மக்களுக்கு நல்ல வாழ்க்கையை எப்படி அளிப்பது என்பதுதான் தெரியவில்லை! நல்ல அரசாங்கத்துக்கு அடிப்படையாக இருப்பது நேர்மையான நல்ல நிர்வாகம்!




வீட்டு உபயோகத்துக்கான எல்லாவித

செப்பு, பித்தளை பாத்திரங்களுக்கும் பிரசித்தி பெற்ற

"யாழ் மார்க்"

அலுமினியப் பாத்திரங்களுக்கும்

கோயில் திருவாசி, கொடித்தம்பம் முதலியவற்றிற்கும்

யாழ் உலோகத் தொழிற்சாலை

250, 254, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# இனி— அந்தச் சங்கதி நடவாது!

சுகுமாரன்

அவன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியபோது மிகவும் களைத்துப்போய் இருந்தான்.

வேலை செய்த களைப்பு.

நல்ல மதிய உணவு இல்லாத களைப்பு.

பஸ்ஸில் பிரயாணம் செய்த களைப்பு.

அவனுடைய வீட்டிலிருந்து அலுவலகம் இருபதுமைல் தூரத்தில் இருக்கிறது. நேர் பஸ் கிடையாது. ஒன்றுமாறி ஒன்றாக மூன்று பஸ்ஸில் பிரயாணம் செய்யவேண்டும்.

— பஸ்களா அவை ...

— அவற்றில் ஏறும் கூட்டம் ...

— ஆட்டு மந்தைகள் மாதிரி ...

— காசு இல்லை. காசு இருந்தால் ஒரு ஸ்கூட்டர் வாங்கலாம் ...

அவனுக்குச் சில நாட்களாகவே இது ஒரு பிரச்சினை.

— இந்தக் களைப்பு ...

— எனக்கு மட்டுந்தான் இப்படியா ........

அவன் வீட்டுக்குள் நுழைந்தபோது அவனது மனைவி வாசலில் இல்லை. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வழக்கமாக அவள் வாசலில் நின்று அவனை வரவேற்பது வழக்கம்.

— அவளுக்கு ஏதாவது சுகமில்லையா?

அவன் அவளைக் கூப்பிட்டான்.

'பெட் ரூம்' கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே வந்தாள்.


கண்கள் ஒரு மாதிரியாக இருந்தன.

— அதிகமாகத் தூங்கியிருப்பாளோ ...

— அல்லது அழுதிருப்பாளோ

அவள் தனது முகத்தில் ஒரு செயற்கையான புன்னகையை வரவழைத்துக்கொண்டாள்.

அவனுக்குக் கிட்ட வந்தாள்.



அவனை நெருங்கி, மிக நெருங்கி, மிக மிக நெருங்கிஅ வனுக்குப் பக்கத்தில் நின்ருள்.

அவன் அவளது தோள்களைப் பற்றினன்.

அவளின் உடல்லேசாக நடுங்கியது.

அவனது கைகள் அதனை உணர்ந்தன.

எதிரே தெரிந்த நிலைக் கண்ணுடியில் பார்த்தான்

வாளிப்பான செழித்த மத மதப்பான வனப்புமிக்க மெழுகுப் பொம்மைபோன்ற அவளது உருவத்துக்குப் பக்கத்தில்வாடிச் சோர்ந்து அலுத்துக் களைத்துக் கருத்துப்போன அவனது உருவம் தெரிந்தது.

அவனது கையில் இருந்த தோல் பையை வாங்கி மேஜை மீது வைத்துவிட்டு "இருங்கள்' தேநீர் கொண்டுவருகிறேன்' என்று சொல்லிவிட்டு அவள் சமையலறைக்குள் சென்ருள்.

— வழக்கமாக தேநீர் தயாரித்து ஃபிளாஸ்கில் டைனிங் டேபிளுக்குமேல் வைத்திருப்பாளே .........

அவன் உடை மாற்றிக்கொண்டு வந்து கட்டிலில் உட்கார்ந்தான்.

அவள் தேநீருடன் வந்தாள்.

அவனது கையில் தேநீரைத் தந்துவிட்டு அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

அவன் தேநீரைக் குடித்தான்,

தேநீரைக் குடிக்கும்போது அவள் அவனிடம் ஏதோ சொல்ல விரும்புகிருள் என்பது அவனுக்குத் தெரிந்தது;

—என்ன சொல்ல விரும்புகிருள் ..

—முகம் ஏன் இன்று ஒருமாதிரியாக இருக்கிறது...

அவனுக்கு ஒரு தடவை நீட்டி நிமிர்ந்து படுத்தால்தான் களைப்புத் தீரும் போலத் தோன்றியது.

தலையணைகளை சீராக அடுக்குவதற்கே அவனுக்குக் களைப்பாக இருந்தது.

அவள் பரபரவென்று எழுந்து தலையணைகளைச் சீராகத் தட்டி ஒழுங்காகப் போட்டாள்;

அவன் நிமிர்ந்து படுத்தான்.

அவள் அவனுக்கு அருகில் உட்கார்ந்தாள்.

அவனுக்கு அலுப்பாக இருந்தது.

கால்களை யாராவது பிடித்துவிட்டால் மிகவும் இதமாக இருக்கும்போல அவனுக்குத் தோன்றியது.

அவளைப் பார்த்தான்.

அவள் எதிர்ச்சுவரை வெறித்துப்பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

—என்ன யோசிக்கிறாள்...

—அலுவலகம் போவது, வீட்டுக்கு வருவது, வீட்டுக்கு வந்தால் இப்படிச் சுவரைப்பார்த்தபடி, அல்லது ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருப்பது... இதுதான் வாழ்க்கையா.. ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரி... செய்ததையே செய்து திரும்பத் திரும்பச் செய்து...

அவன் மெதுவாகக் கண்களை மூடினான்.

அவள் இவன் பக்கம் திரும்பிப்பார்த்தாள்.

—இவர் ஏன் இப்படிக் களைத்துக் களைத்துப் போகிறார்......

—இந்த மூன்று வருடகாலத்தில் இவர் எப்படி மாறிப்போய் விட்டார்... தலை ஓரங்களெல்லாம் நரைத்துக் கொண்டு வருகிறது... கைகள்தான் எவ்வளவு மெலிந்துபோய் விட்டன... முகமெல்லாம் சொரசொரப்பாக இருக்கிறது— ஷேவ் செய்வதற்குக் கூடக் களைப்பா...

அவளுக்கு ஒரு பெருமூச்சு வந்தது. அவனையே பார்த்துக்கொண்டு இருந்தவள் மெதுவாக தலையை குனிந்தாள். அவளின் முகம் அவனது முகத்தை நெருங்கியது.

வெப்பமான மூச்சுக் காற்று முகத்தில் படுவது அவனுக்குத் தெரிந்தது.

அவன் கண்களைத் திறந்தான்.

அவனது விழிகள் அவளது விழிகளைச் சந்தித்தன.

ஒன்று

இரண்டு

மூன்று

........

வினாடிகளா அல்லது யுகங்களா ...

பார்வைகள் விலகவில்லை.

அவளது கரங்கள் அவனது கழுத்தை வளைத்தன,

அந்தக் கரங்களை விலக்கிக்கொண்டு அவனையறியாமலே அவன் முகத்தை மறுபுறம் திருப்பினான்.

— சே! நான் ஏன் இப்படிச் செய்தேன் ...

திடுதிடுப்பென்று அவளது கண்களில் நீர் முட்டியது.

— அழுகிறாயா ...

அவன் கேட்கத்தான் நினைத்தான். ஆனால் கேட்கவில்லை. இரண்டு நிமிடம் நீட்டி நிமிர்ந்து படுத்திருப்பதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானதாக அப்போது அவனுக்குத் தெரிந்தது.

அவள் நிமிர்ந்து உட்கார்ந்து கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

— எல்லா வீடுகளிலும் இப்படித்தானா ...

— பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் படிக்கிறமாதிரி ...

— பத்திரிகைகளிலும் புத்தகங்களிலுந்தானா ... கதைகளில் தானா ... ... உண்மையைத்தானே கதையாக எழுதுகிறார்கள் ...

— இவரே சொல்லியிருக்கிறாரே இவருடைய அலுவலகத்தில் காஷியராக இருப்பவரைப்பற்றி ... ஒவ்வொரு நாளும் இரவு இரண்டு மணிக்குமேல்தானாமே வீட்டுக்குப் போவார் ... இவரும் அப்படி ஏதாவது ...

அவன் கண்களைத் திறந்து பார்த்தான். எவ்வளவு நேரமாயிற்றென்று தெரியாது. அவள் கைகளால் முகத்தை மூடியபடி இருந்தாள்.

சேலைத் தலைப்பு விலகிக் கிடந்தது.

அந்த எடுப்பு ...

அந்தச் செழிப்பு ...

பஞ்சு மாதிரி மென்மையான அந்த வயிறு ...

அவனது களைப்பும் அலுப்பும் கொஞ்சம் கொஞ்சமாக அவனை விட்டு விலகிக்கொண்டிருந்தன.

மெதுவாக தனது கைகளால் அவளது இடையை வளைத்து தன்னுடன் அணைத்துக்கொண்டான்.



யாழ். ஆஸ்பத்திரியில் கண்ட நாலு அனாதைக்குழந்தைகளைப்பற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் ஒருசோகக்கதை சமீபத்தில் வெளிவந்தது. அதைப் படித்த அமைச்சர் குமாரசூரியர் நெஞ்சுருகி அந்த அனாதைக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக ஒரு நிதி திரட்டும்படி 'ஈழநாடு' பத்திரிகைக்கு கடிதம் எழுதியது மட்டுமல்ல, தாமே ரூபா 200 அன்பளிப்புச் செய்வதாகவும் அறிவித்திருக்கிறார். இந்தச் செய்தியைப் படித்தவர்கள் அமைச்சரின் தயாள குணத்தைப் பாராட்டுவார்கள்! அதேசமயம் அந்த அனாதைக் குழந்தைகளின் நிலைகண்டு இரங்கி, அவர்களுக்காக தனது பேனாவை இயக்கி, அமைச்சரும் மனம்கரையும்படி எழுதியிருக்கிறாரே ஒருவர்; அந்த எழுத்தாளரைப்பற்றி எத்தனைபேர் நினைத்துப்பார்க்கிறார்கள்? 'ராஜன்' என்ற பெயரில் அதை எழுதியவர் வேறு யாருமல்ல; 'ஈழநாடு' ஆசிரிய குழுவைச் சேர்ந்த 'பாமா ராஜகோபால்' தான் அவர்!

அவள் கண்களைத் திறந்து பார்த்தாள்,

" அழுகிறாயா ? " என்றான் அவன்.

அவள் கண்கள் திடீரென்று மின்னின:

" இல்லை, இல்லை ! இன்று முழுக்க தாங்கமுடியாத ஒரே தலை வலியாக இருந்தது அதுதான் ! " என்றாள்.

" இந்த நான்கு சுவர்களுக்குள்ளேயே இருபத்துநாலு மணி நேரமும் இருந்தால் தலைவலி வரத்தானே செய்யும் " என்றான் அவன்.

அவன் சிறிது நகர்ந்து படுத்தபடியே " இதோ இப்படிப் படுத் துக்கொள் " என்று கூறி அவளுக்கு இடம் விட்டான்.

அவனது கைகள் அவளை மிகுந்த ஆதுரத்துடன் தடவின.

அவள் பாகாய் உருகினாள்.

அவளுக்கு நெஞ்செல்லாம் ஏதோ செய்தது:

ஒரு தவிப்பு.

தாங்க முடியாத ஒரு தவிப்பு.

அவளுக்குத் தன்மீதே ஆத்திரமாக இருந்தது.

— சே, நான் ஒரு ......

பருந்துக்குப் பயந்து நடுங்கும் கோழிக்குஞ்சு போல அவள் உடல் சிலிர்த்தது.

— நான் ஏன் பயப்படுகிறேன் ...

— மனசில் தோன்றிய மயக்கம் குற்றந்தானே ...

அவள் அவனை விட்டுப் பிரிய விரும்பாதவள் போன்று அவ னுடன் நெருங்கி, மிக நெருங்கி அணைத்துக்கொண்டாள்.

கடன் வாங்கியாவது ஒரு ஸ்கூட்டரோ அல்லது மோட்டார் சைக்கிளோ வாங்கவேண்டுமென்று அவன் நினைத்துக்கொண்டான்.

— காலையிலும் ஆறுதலாக அலுவலகத்துக்குப் போகலாம் ... மாலையிலும் நேரத்துடனேயே வீட்டுக்கு வந்துவிடலாம் ...

அவளை அணைத்தபடியே இருந்த அவனது கை மேலும் நெருக்க மாக அவளை இழுத்தது.

அவளது நெஞ்சம் நிலைகொள்ளாது தவித்தது; 'கோ'வென்று கதறி அழவேண்டும் போலத் துடித்தது.

— தவறு என்மேலுந்தான் ......

— பார்வைகளாலும் பேச்சுக்களாலும் நான் கொடுத்த உற் சாகம் கொஞ்சமா ...

— பகிடி பகிடியாகத் தொடங்கியது எப்படி விஸ்வ ரூபம் எடுத்தது ...

— பேச்சிலும் பார்வையிலும் தெரிந்த இனிமை ... சில அவ சரமான நேரங்களில் ஸ்பரிசங்களினால் ஏற்பட்ட உணர்ச்சி ... அந்த உணர்ச்சிகளின் நினைவுகளின் காரணமாக நினைவுகளில் எழுந்த உறவு ...

— முன் அறையில் வாடகைக்கு குடிவந்திருந்த வாலிபனுக்கு துணிச்சலைத் தந்தவள் நான்தானே ...

— அந்த அணைப்பு, அந்த அணைப்பில் தெரிந்த இறுக்கமும் முரட்டுத்தனமும், அதில் அடைந்த மயக்கம், அந்த மயக்கம் தந்த மௌனம் ...

— மௌனத்தில் தெரிந்த சம்மதத்தைத் தெரிந்துகொண்டு அவன் ...

— நல்ல வேளை ... வாசலில் வந்த மண்ணெண்ணெய் வண்டிக் காரனுக்கு நன்றி சொல்ல வேண்டும் ...

— சீ! ... நான் ... நான் ...

அவளுக்கு உடலெல்லாம் வியர்த்தது;

அவளின் நிலை அவனுக்குப் புதியதாக இருந்தது. கவலை தருவதாக இருந்தது.

"என்ன இது, ஏதாவது சுகமில்லையா ... ஆஸ்பத்திரிக்குப் போவோமா ?" என்றான் அவன்.

" ஒன்றுமில்லை ... ஒன்றுமில்லை ... சும்மா தலைவலிதான் ..." என்றாள் அவள்.

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

" தனிய இங்கே மொட்டு மொட்டென்று நீ இருந்தால் இல்லாத வருத்தமெல்லாம் வந்துவிடும் ... விரைவிலேயே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும் ... என்னுடைய பிரயாணப் பிரச்சினை தீர்ந்துவிட்டால் உனக்கு உதவியாக நான்கூட ஏதாவது வேலைகளும் செய்து தரலாம்.. பின்னேரங்களில் ஒவ்வொரு நாளும் எங்காவது உலாவக்கூடப் போகலாம் ..."

அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே அவள் எழுந்தாள்;

"என்ன அவசரம் ... என்ன செய்யப் போகிறாய் ..." என்றான் அவன்.

" கொஞ்சம் இருங்கள். நேற்றைக்கு வாங்கிக்கொண்டுவந்த மாம்பழங்கள் இருக்கின்றன ... வெட்டிக்கொண்டு வருகிறேன்..." என்றாள்.

" இப்பொழுது அதற்கொன்றும் அவசரமில்லை ... இப்படி இரு ..." என்று அவளைப் பிடித்து இழுத்து தன் மடிமீது போட்டுக் கொண்டான் அவன்.

" என்னுடைய சிநேகிதி ஒருத்தி 'கொன்வென்'டில் படிப்பிக்கிறாள் ... இப்பொழுது அப்போதிக்கரி கனகசபை வீட்டில் இருக்கிறாள் ... அங்கே வசதி குறைவாம் ... அவளை இங்கே இருக்கச் சொல்லுவோமா ... முன் அறையில் இருக்கின்றவரை வேறு எங்காவது இடம் பார்க்கச் சொன்னால் அவள் இங்கே தங்குவது வசதியாக இருக்கும் ..." என்றாள் அவள்.

" இந்த வீட்டுக்கு நீதானே ராணி.... இதெல்லாம் என்னைக் கேட்டுக்கொண்டா செய்யவேண்டும் ..." என்றான் அவன்.

அவளது நெஞ்சத்திலிருந்து பெரிய சுமை இறங்கியது போல இருந்தது.

அவள் அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டாள். ●

✢ விவசாயத் துறையில் இந்தியாவில் ஒரு மகத்தான புரட்சி ஏற்பட்டு இருக்கிறது! இந்திய நாட்டின் எல்லாப் பாகங்களிலுமே இந்தப் பசுமைப் புரட்சி பரவி இருக்கிறது! உணவு தானியங்கள் விஷயத்தில் தன்னிறைவு



வுகாணக்கூடிய அளவுக்கு அங்கு தானிய விளைச்சல் ஏற்பட்டு இருக்கிறது! முன்னர் இந்திய மத்திய அரசாங்கத்தில் உணவு விவசாய அமைச்சராக இருந்த சுப்பிரமணியம்தான் இந்தப் புரட்சிக்கு அத்திவாரம் இட்டவர்! விஞ்ஞான முன்னேற்றத்தை மிகவும் துரிதமாக விவசாயத் துறையில் புகுத்தவேண்டுமென திட்டமிட்டு செயல் பட்டவர் சுப்பிரமணியம்தான்! இவர் இப்போது இந்தியாவின் திட்ட மந்திரியாக இருக்கிறார்! சரியாகத் திட்டமிட்டு நல்ல நிர்வாகம் செய்து எந்தவொரு காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில் சுப்பிரமணியம் வெகு கெட்டிக்காரர்!

✢ இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு இப்போது 75 வயது ஆகின்றது! அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கிவிட்ட இவர் இப்போது கந்தாவளைத்தோட்டத்தில் வசித்து வருகிறார்! கேளிக்கை கும்மாளம் என்பனவற்றில் வெகுபிரியரான இவர் அடிக்கடி இங்கிலாந்து ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணம் செய்து வருகிறார்! இவரைப் பார்க்கின்றவர்கள் யாரும் இவருக்கு 75 வயது என்று சொல்ல மாட்டார்கள்! நல்ல வாலிபர் மாதிரித்தான் தோற்றம் தருகிறார், இவரது கந்தாவளைத் தோட்டத்தில் யானை, மான், முயல், நாய், மயில், குயில், தாரா போன்ற ஏராளமான மிருகங்களும் பறவைகளும் இருக்கின்றன! தெகிவளை மிருகக் காட்சிச் சாலை மாதிரித்தான் இவரது தோட்டமும் இருக்கிறது! இங்குள்ள பிராணிகளுக்கு உணவளிப்பது இவருக்கு வெகு பிரியமான இரண்டாவது பொழுது போக்காகும்! இவரது முதற் பிரியத்துக்கு உரிய பொழுது போக்கு என்ன என்பது இலங்கையர் அனைவருக்குமே தெரிந்த சங்கதியாகும்!

✢ ஆங்கிலத் துப்பறியும் நாவல்களை எழுதிய உலகப் புகழ் பெற்ற எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் டெலிவிஷன் நாடகங்களும் பல எழுதியிருக்கிறார். நூற்றுமுப்பது நாவல்களுக்கு மேல் எழுதியுள்ள இவர் இது வரை இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு டெலிவிஷன் நாடகங்களையும் எழுதியிருக்கிறார்; இவரது எழுத்துக்கள் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன!

✣ இந்தியாவில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தி.மு.க. தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு தனது பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டவர் மூதூர் மஜீத்! கிழக்கு மாகாணத்து முஸ்லிம் மக்களிடையே இவருக்கு ஒரு தனிச் செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் இவரது பேச்சாற்றல்தான்! மூதூரில் இருந்த முகம்மதலி தொடர்ச்சியாக விட்ட தவறுகள் இவருக்கு தொடர்ச்சியான வாய்ப்புக்களைத் தந்துகொண்டு வந்தன! வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தி அபாரமாக முன்னேறிவிட்டார் மஜீத்!




அச்சில்

6-ம் வகுப்பு 2-ம் தவணைக்குரிய நூல்கள்

1. புதிய சமூகக்கல்வி

(யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு மாவட்டங்களுக்கான தனித்தனி விசேட பதிப்புகள்)

2. ENGLISH (Exercise for Book IV)

3. புதிய கணிதப் பயிற்சி

ஷெ நூல்கள் யாவும் அரசினரின் புதிய பாடத் திட்டத்துக்கமையத் தொகுக்கப் பெற்றவை.

வெளியீடு:-

சுந்தரம் புத்தகசாலை,

அச்சுவேலி.

## சுகுமாரனின் கதைகள்

சுகுமாரனின் கதைகள் தொடர்ந்து வெள்ளியில் வருமென அறிவித்தீர்கள். ஆனல் கடந்த மூன்று இதழ்களாக அவரின் கதைகளைக் காணவில்லையே? எங்களுக்கு ஏமாற்றம்தானு?

கரவெட்டி — மகம்

சுவையான கதைகளைத் தந்த சுகுமாரனைச் சில இதழ்களாகக் காணவில்லையே — என்ன சங்கதி? தொடர்ந்து அவரை எழுதச் செய்யுங்கள்!

கொழும்பு 14. — கோ. ஜெயசீலன்

## வளரும் எழுத்தாளர்கள்

இளம் எழுத்தாளர்களின் எழுத்தார்வத்தை நீங்கள் அடிக்கடி நடத்தும் போட்டிகள் வளர்க்கின்றன. வாழ்க உங்கள் பணி! வெள்ளி மாதமிருமுறையாக மலரஇருப்பது அறிந்து மகிழ்ச்சி!

வத்துகாமம் — செல்வி விசாலாட்சி மூக்கையா

"வெள்ளி படித்துவிட்டீர்களா?" என்று மிகுந்த ஆர்வத்தோடு வாசகர்கள் கேட்கும் நிலைக்கு வெள்ளி வளர்ந்துவிட்டது! பல புதுமையான உத்திகளைக் கையாண்டு வெற்றிபெற்று வருகின்றீர்கள். போட்டிகளை நடத்தி வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியும் வருகின்றீர்கள். நான் அனுப்பிய கதை பாராட்டுப் பெற்றதை அறிந்து மகிழ்கிறேன். ஓராண்டு காலத்திலேயே மிக உயர்ந்த வளர்ச்சி அடைந்து வெகு விரைவிலேயே வெள்ளி மாதமிருமுறை சஞ்சிகையாக வரவிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். உங்கள் துணிவுக்குக் கிடைத்த வெற்றி இது!

கைதடி. — "தச்சன்தோப்பு மணியன்"

பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் விடயத்தைப் பிரசுரிக்கின்றன. அதற்குரிய ஊதியத்தை அவை தருவதில்லை. சில சமயம் பிச்சைக்காசு தருகின்றன. சென்ற இதழில் பிரசுரமான எனது அட்டைப்படக் கதைக்காக நீங்கள் அனுப்பிய புத்தகப் பார்சல் பெரும் ஊதியம். இதை மறக்க முடியாது.

திருகோணமலை. — ராஜ தர்மராஜா

'கேள்வி பதில்' பகுதியில் பரிசு பெற்றதற்காக நீங்கள் அனுப்பிய பரிசுப் புத்தகங்கள் மூன்றும் கிடைத்தன. மிக்க நன்றி.

கொழும்பு 15. ஜே. சின்னத்தம்பி

## அரசியல்

கட்சிரீதியாக அரசியலை அணுகாமல் அறிவு பூர்வமாக அரசியலை அணுகும் உங்கள் பாங்கு எனக்குப் பிடித்திருக்கிறது. மாதமிருமுறை வெள்ளி மலர இருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி.

யாழ்ப்பாணம். — தி. சபாரத்தினம்

## தொடர்கதை சஸ்பென்ஸ்!

வெள்ளியில் தொடர்கதை எழுதப்போகும் எழுத்தாளர் யார்? அவர் பெயரைத் தெரிவிக்காமல் இருப்பதும் ஒரு 'சஸ்பென்ஸா'?

ஊர்காவற்றுறை. கே. சிவதேவி




அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.